# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • நவம்பர் 30, 2019

Weekly E-paper • NOVEMBER 30, 2019



# அவமானப்பட்ட அமித்ஷா அரசியல்

சுப. வீரபாண்டியன்



## தனியார் மயமாகும் பொதுத்துறை.

நேர்காணல், மா.உதயகுமார்

## இலங்கைக்குக் கொடுக்கும் நிதி...?

தலையங்கம்




## கருப்பும் காவியும்

நூலறிமுகம்: வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● நவம்பர் 30, 2019 Weekly E-paper ● NOVEMBER 30, 2019

# அவமானப்பட்ட அமித்ஷா அரசியல்

● சுப. வீரபாண்டியன்



*மகராஷ்டிராவில் காலை 5.45க்கு குடியரசுத் தலைவர் ஆட்சி நீக்கிக்கொள்ளப்பட்டு, 8 மணிக்கு பாஜக வின் பட்நாவிஸ் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதை, அமித்ஷாவின் அரசியல் சாணக்கியம் என்றார்கள். அது இப்போது அரசியல் அநாகரிகமாகி, அவமானப்பட்டு நிற்கிறது.*

*இனியேனும் அவர்கள் திருந்துவார்களா என்று திமுக தலைவர் கேட்டுள்ளார். இல்லை, அவர்கள் ஒருநாளும் திருந்த மாட்டார்கள்.*

*இது ஒருபுறமிருக்க, உத்தவ் தாக்கரே முதல்வராகப் பதவியேற்ற விழாவில், திமுக தலைவர் பங்கேற்றுக் கொண்டதை விமர்சனம் செய்து சிலர் எழுதியும், பேசியும் உள்ளனர். திமுக தலைவரை அவர்கள் அழைத்ததோடு மட்டுமின்றி, பெருமதிப்புடன் அவரை வரவேற்று, முதல் வரிசையிலும் அமர வைத்துள்ளனர். அனைத்திந்திய அரசியலில், திமுக ஒரு பெரும் சக்தியாக வளர்ந்து வருவதை அந்நிகழ்ச்சி உறுதிப்படுத்தியுள்ளது. அதனைப் பொறுக்க முடியாதவர்கள் பொருமுகின்றார்கள்.*

*சிவசேனா தொடங்கப்பட்ட 1966 ஆம் ஆண்டு, அங்கு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்தன என்பது உண்மையே. ஆனால் அதற்குப் பிறகு, பல மாற்றங்கள் நடந்துள்ளன.*

*சாதாரண கேலிச்சித்திரப் படக்காரராக த் (கார்ட்டூனிஸ்ட்) தன் வாழ்வைத் தொடங்கிய பால் தாக்கரே, அதற்கு கிடைத்த வரவேற்பைப் பயன்படுத்திக் கொண்டு, சொந்தமாக ஓர் இதழைத் தொடங்கினார். அதில் பெற்ற வெற்றியே, சிவசேனா என்னும் காட்சியைத் தொடங்குவதற்கு அடித்தளமிட்டது.*

*"நேற்றுவந்த மதராஸி, பம்பாயின் பணக்காரராக இருக்கிறார், இந்த மண்ணில் பிறந்த மராத்தியர் ஏழையாகத் திரிகிறார்" என்று அவர் எழுப்பிய குரலே, 1966 அக்டோபரில் ஒரு வன்முறைக்கு வித்திட்டது.*

*1967இல் அங்கு சென்ற தலைவர் கலைஞரும், நாவலரும் ஆற்றிய உரைகள் ஒரு சுமுக நிலையை ஏற்படுத்தின. அதன்பிறகு, அண்ணாவின் நூல்களை ஆங்கிலத்தில் தான் படித்துள்ளதாகவும், இந்தியாவில் மாநிலக் கட்சிகளுக்குத் திமுக தான் முன்னோடி என்றும் பால் தாக்கரே கூறியுள்ளார்.*

*1978 மே மாதம், கலைஞர் அங்கு சென்றிருந்தபோது, யாரையும் சென்று சந்திக்காத பால் தாக்கரே, ஓபராய் டவர்ஸ் ஹோட்டலுக்குச் சென்று, கலைஞரைச் சந்தித்து ஏறத்தாழ ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்.*

*ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தை அவர் ஆதரித்தார். 2001 ஜூன் 30 நள்ளிரவில் கலைஞர் கைது செய்யப்பட்டபோது, அதனைப் பால் தாக்கரே வன்மையாகக் கண்டித்தார். அதற்கு திரு டி.ஆர். பாலு அவர்களும், மும்பை திமுக பொறுப்பாளர்களும் நேரில் சென்று நன்றி கூறினர்.*

*எனவே இன்றைய சூழலில், பாஜகவால் ஏமாற்றப்பட்ட சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகளின் ஆதரவோடு அங்கு ஆட்சி அமைத்திருப்பது நல்ல திருப்பம். இந்த நேரத்தில் அவர்கள் திமுக தலைவரை அழைத்திருப்பதும், அவர் கலந்து கொண்டிருப்பதும் வரவேற்கத்தக்கன.*

*.தமிழகத்தில் மட்டுமின்றி, இந்திய அளவிலும் வலிமையாகக் காலூன்றத் தொடங்கியுள்ள திமுக, தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்தியாவெங்கும் மாநில சுயாட்சி மலரப் பாடுபட வேண்டும்!*

●

## அதிமுக இல்லை, ஆதிமுக




‘திராவிட அரசியல் ஒழியட்டும், ஆன்மிக ஆட்சி அமையட்டும்" என்னும் வரிகளை முன்னிறுத்தி, அர்ஜுன் சம்பத், சென்னையில், வரும் ஞாயிறு அன்று ஒரு மாநாடு நடத்துகின்றார். அதில் அதிமுக அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கலந்துகொள்வதாக அறிவிப்பு வந்துள்ளது- திராவிடத்தை ஒழிக்க நடத்தப்படும் மாநாட்டில், அதிமுக அமைச்சர் பங்கேற்கிறார் என்றால் என்ன பொருள்? அது அண்ணா திமுக இல்லை, அடிமைகள் திமுக அல்லது ஆன்மிக திமுக என்பதுதானே!.

# தனியார் மயமாகும் பொதுத்துறை...

**தனியார் மயமாகும் பொதுத்துறை குறித்த நேர்காணல் பேராசிரியர் அருணன்**

**- மா.உதயகுமார்**

**பாஜக அரசு பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் செயல்களைச் செய்து வருகிறது. எந்த நோக்கத்திற்காக அவர்கள் இதைச் செய்கிறார்கள்?**

பாஜக என்பது ஆர்எஸ்எஸ் அமைப்பின் அரசியல் பிரிவு. பழைய மனுவாதக் கட்டமைப்பை மீட்டுக் கொண்டு வருவது, பிராமணியத்தை நிலை நிறுத்துவது என்பது சமூக ரீதியான திட்டம். பொருளாதாரத்தைப் பொருத்தவரையில் அதற்கு இணையானது கட்டற்ற முதலாளித்துவம். ஆங்கிலத்தில் *"Crony Capitalism"* என்று சொல்வார்கள். கள்ளக் கூட்டு முதலாளித்துவம் என்று தமிழில் சொல்வோம். அந்த முதலாளிகளுக்கு எல்லாவற்றையும் திறந்து விடுவது என்பதுதான் அவர்கள் பொருளாதாரக் கொள்கை. இது இன்றைக்கு அவர்கள் எடுத்த நிலைப்பாடு அல்ல. 1950 களிலேயே அவர்கள் இப்படித்தான் முன்மொழிந்தார்கள். இதைத்தான் ராஜாஜி அவருடைய சுதந்திரா கட்சி மூலம் முன்மொழிந்தார். அவர்களுடைய கொள்கை சமூக ரீதியாகப் பிராமணியத்தை நிலை நிறுத்துவதும் பொருளாதார ரீதியாகக் கள்ளக் கூட்டு முதலாளித்துவத்தை நிலை நிறுத்துவதும்தான்.

**தனியார்மயப்படுத்துவதில் பெருநிறுவனங்களின் தலையீடு எந்த அளவிற்கு இருக்கிறது?**



பாஜக ஆட்சிக்கு வருவதற்கு இரண்டு விஷயத்தை நம்பினார்கள். ஒன்று மதவெறியைக் கிளப்பி விட்டு இந்து வாக்கு வங்கியை உருவாக்குவது. இரண்டாவதாக அவர்கள் நம்பியது பணத்தை. பல ஆயிரம் கோடி ரூபாய் பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு அவர்கள் தேர்தலைச் சந்தித்தார்கள். அவர்களுக்கு வேண்டிய பெரு முதலாளிகளிடம் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீங்கள் வேண்டியவற்றைச் செய்வோம் என்று சொன்னார்கள். அந்த முதலாளிகள் பொதுத்துறையே இருக்கக்கூடாது, அவற்றை ஒழிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்த நிறுவனங்களைத் தனியார் மயமாக்க வேண்டும், ஆங்கிலத்தில் *"divestment"* என்று சொல்வார்கள், அதாவது எங்களுக்கு அடிமாட்டு விலையில் விற்றுவிட வேண்டும் என்று சொன்னார்கள். இந்த முதலாளிகள் சொன்னதை ஒப்புக் கொண்டுதான் பாஜக ஆட்சிக்கு வந்தது. முதல் முறை கொஞ்சம் கொஞ்சமாக இதைச் செய்ய ஆரம்பித்தார்கள். இரண்டாவது முறை வந்தவுடன் இன்னும் உறுதியாக அனைத்தையும் தனியாருக்கு விற்கிறார்கள்.

இன்றைக்கு வரைக்கும் 4Gயைச் சரியாக பிஎஸ்என்எல்லுக்குக் கொடுக்கவில்லை. அந்நிறுவனத்தை நட்டம் அடைய வைத்தார்கள். ஏர் இந்தியாவை டாடா நிறுவனத்திற்கு விற்கப்போவதாக அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களே சொல்கிறார்கள். அந்த நிறுவனத்திடம் இருந்துதான் பெருந்தொகையை நன்கொடையாகப் பெற்றார்கள். ஒரு ஆண்டில் மட்டும் கிட்டத்தட்ட 700 கோடி ரூபாயைப் பெருநிறுவனங்களிடம் இருந்து நன்கொடை வாங்கி இருக்கிறார்கள். அதில் 356 கோடி ரூபாய் டாடா நிறுவனத்திடமிருந்து மட்டும் வாங்கியிருக்கிறார்கள். சுப்பிரமணியன் சுவாமி *"Conflict of Interest"* என்று ட்விட்டரில் பதிவிடுகிறார். அதாவது டாடா நிறுவனம் பாஜகவிற்கு ரூபாய் 356 கோடி நிதி வழங்கி இருக்கிறது. பாஜக ஏர் இந்தியாவை டாடாவிற்கு விற்கிறது. இதுதான் *"Conflict of Interest"* என்பது. அதாவது டாடா சொல்லும் விலைக்குதான் அவர்கள் ஏர் இந்தியாவை விற்கப் போகிறார்கள். இது நியாயமா என்று அவர்கள் கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணியன் சாமியே கேட்கிறார். இவ்வளவு பச்சையாக அவர்கள் பொதுத்துறையை ஒழித்துக் கட்டுகிறார்கள்.

**இந்தியா போன்ற நாடுகளில் ஏன் பொதுத்துறை நிறுவனங்கள் இருக்க வேண்டும்?**

சீனாவில் மட்டும் தனியார் துறையை வளர்க்கிறார்கள் என்று பொதுவாகக் கேட்கிறார்கள். அது உண்மைதான். அவர்கள் வெளிப்படையாகவே அதனை அறிவித்துத் தனியார் துறைக்கு அதிக வாய்ப்புகள் தருகிறார்கள். ஆனால் அவர்கள் எந்தப் பொதுத்துறை நிறுவனத்தையும் தனியாருக்கு விற்கவில்லை. பொதுத்துறை, தனியார் துறை, கூட்டுத் துறை, கூட்டுறவுத்துறை இந்த நான்கு துறைகளும் இருக்கவேண்டும். அப்போதுதான் ஒன்றுக்கொன்று போட்டி ஏற்படும். அது ஆரோக்கியமானதாக இருக்கிறதா என்பதை அரசு மேற்பார்வை பார்க்க வேண்டும். அதுதான் இந்தியா போன்ற பெரிய நாடுகளைப் பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும். ஆனால் இவர்கள் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் பொதுத்துறையை ஒழித்துக் கட்டி விடுவார்கள். இது பொருளாதாரத்திற்கு மிகப்பெரும் கேடு.

இந்தியா போன்ற நாடுகளில் பொதுத்துறை என்பது, சமூக நீதியை நிலைநாட்டவும் அவசியம் தேவை. சீனா போன்ற நாடுகளில் சாதி கிடையாது. பொதுத்துறை இருந்தால் அரசு இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த முடியும். நாம் இப்போது தனியார் துறையில் இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட வேண்டும் என்று கேட்க வேண்டியிருக்கிறது. இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதில் தனியார் துறைக்குப் பொறுப்பு இருக்கிறது. தனியார் நிறுவனங்களுக்கு அரசு எவ்வளவு உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்து தருகிறது, எவ்வளவு வரிவிலக்குப் பெறுகிறார்கள், பொதுமக்கள் பணத்திலிருந்து தானே இவ்வளவையும் தனியார் நிறுவனங்கள் பெறுகிறார்கள்? தனியார் துறையில் இட ஒதுக்கீடு கேட்க வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த அரசு கேட்கப் போவதுமில்லை அவர்கள் ஒப்புக் கொள்ளப் போவதுமில்லை.

பொதுத்துறையை ஒழிப்பது என்பது சமூக அநீதி. பிராமணியத்தையும் முதலாளித்துவத்தையும் நிலை நிறுத்துவதற்காக இது செய்யப்படுகிறது. அதனால் தான் அண்ணல் அம்பேத்கர் இந்தியப் பாட்டாளி வர்க்கத்தை பார்த்து "உங்களுக்கு இரண்டு எதிரிகள். ஒரு எதிரி பிராமணியம். இன்னொரு எதிரி முதலாளித்துவம்" என்று 1940களில் சொன்னார். பொதுத்துறையைக் காக்கும் கடமை சமூக இயக்கங்களுக்கும் இருக்கிறது. மதச்சார்பற்ற அரசியல் கட்சிகளுக்கும் இருக்கிறது.

**தனியார்மயப்படுத்தும் போது பாதிக்கப்படும் தொழிலாளர் நலன்கள்?**

ஏற்கெனவே தொழிலாளர் நலச் சட்டங்களை எல்லாம் முதலாளி நலச் சட்டங்களாக மாற்றுகிறார்கள். குறிப்பாக ஒப்பந்தத் தொழிலாளர் முறையை கொண்டு வருகிறார்கள். *"Hire and Fire"* என்கிற முறையில் தொழிலாளர்களை பணியில் அமர்த்துகிறார்கள். அவர்கள் நினைத்தால் வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள். இதற்கு ஒப்பந்தத் தொழிலாளர் முறையே சரியாக இருக்கிறது. நிரந்தரத் தொழிலாளர்களை இதுமாதிரிச் செய்ய முடியாது. அதற்குத் தொழிலாளர் நலச்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## சென்னை திப்பு சுல்தான் கருத்தரங்கம்



23-11-2019 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக சென்னை அன்பகத்தில் திப்பு சுல்தான் கருத்தரங்கம் நடைபெற்றது. பேரவையின் துணைப்பொதுச்செயலாளர் தோழர் சிங்கராயர் தலைமை தாங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

## 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அதனால் நிரந்தரத் தொழிலாளர்களே வேண்டாம் என்கிறார்கள். இன்னொரு பக்கம் இந்தத் தொழிலாளர் நலச் சட்டங்களை எல்லாம் ஒழித்து கட்டுகிறார்கள்.

இன்றைக்கு நாம் ஐடி நிறுவனங்களைப் பார்க்கிறோம். வேலை நேரத்திற்கெல்லாம் கணக்கே இல்லை. 13-14 மணி நேரம் உழைக்கிறார்கள். 8 மணி நேர வேலை என்பது உலகம் முழுவதும் போராடிப் பெற்ற உரிமை. ஆனால் இன்று அதையே 9 மணி நேரமாக்க வேண்டும் என்று ஆட்சியாளர்களே சொல்கிறார்கள். ஊதியம் என்பது ஒரு ஒழுங்கு முறையற்று அவர்கள் விருப்பத்திற்கு நிர்ணயிக்கப்படுவதாக இருக்கும். ஒரே வேலைக்கு ஒரே ஊதியம் என்பது இருக்காது. ஏற்கெனவே ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான ஊதியம் கிடையாது. இதெல்லாம் நிச்சயமின்மை, நிரந்தரமில்லாதத் தன்மையை ஏற்படுத்தும். நாளைக்கு இந்த வேலை இருக்குமா என்கிற பயத்திலேயே நம்மை வைத்திருப்பார்கள். இதுதான் முதலாளித்துவத்தின் குணம். ஒரு அச்சத்திலேயே மக்களை வைத்திருப்பது பல வகையான சமூகக் குற்றங்களுக்கு வித்திடும். சமுதாயம் சீரழிந்து விடும். குற்றச் செயல்களும் ஊழலும் அதிகமாகும். ஒட்டுமொத்தச் சமூக அமைப்பின் நிலை என்ன ஆகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தனியார் துறை இருக்கவே கூடாது என்று சொல்லவில்லை. பொதுத் துறையும் இருக்க வேண்டும். நல்ல போட்டியிருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் பொதுத்துறை தனியார் துறைக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். தனியார் துறை பொதுத்துறையைப் பின்பற்றிச் செயல்பட வேண்டும். தனியார் துறை மட்டும் இருந்தால், அந்த முதலாளிகளுக்கு இடையில் கழுத்தறுப்பு போட்டிதானிருக்கும். இதில் பாதிக்கப்படுவது தொழிலாளிதான். ஆகவே இந்தத் தனியார்மயம் என்பது எல்லா வகையிலும் கெடுதல் தான்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இலங்கைக்குக் கொடுக்கும் நிதி...?

இந்தியாவில் மத்திய அரசு பொறுப்பேற்ற 2014 ஆம் ஆண்டுத் தொடக்கம் இந்திய அரசின் பொருளாதார நிலை கேள்விக்குறியாகவே இருந்தது.

இப்பொழுது பிரதமர் மோடியின் பொருளாதாரக் கொள்கை சீரழிந்து படுபாதாளத்திற்குப் போய் விட்டது.

கருப்புப் பணத்தை ஒழிக்கப் போகிறேன் என்று கூறிக்கொண்டு பணமதிப்பிழப்பு நீக்கம் செய்தார் மோடி. அதன் விளைவாக நாட்டின் பணப்புழக்கம் வெகுவாகக் குறைந்து போனது.

இதனால் தொழில்துறை முடங்கிப் போனது. ஆட்டோமொபைல், ஆபரணங்கள், நெசவு ஆகிய தொழில்கள் அடியோடு பாதிக்கப்பட்டன.

புதிய தொழில்கள், தொழிற்சாலைகள் போன்றவை உருவாகி புதிய வேலைவாய்ப்புகள் உருவாவதற்கு மாறாக இலட்சக்கணக்கானவர்கள் வேலையிழந்து விட்டார்கள்.

நடப்பு நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களில் மொத்த உற்பத்தி விழுக்காடு 5 ஆகக் குறைந்தது. இது மிகவும் அதிர்ச்சி தரக்கூடியதாக இருக்கிறது என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகிறார்கள்.

நிதிநெருக்கடி குறித்தும் பொருளாதாரச் சரிவு குறித்தும் எதிர்க்கட்சிகள் மக்களவையில் கேள்விகள் கேட்ட போது இன்றைய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், ‘பொருளாதாரம் மந்த நிலையில்தான் இருக்கிறது. ஆனால் சரிவு ஏற்படவில்லை. இது ஒரு பின்னடைவுதான்... 2014 ஆம் ஆண்டுக்குப் பின் இதுவரை பொருளாதார நிலை 7.5 சதவீதமாக இருக்கிறது’ என்று சொல்லியிருக்கிறார்.

இது அப்பட்டமாக உண்மைக்கு மாறான தகவல். இன்றைய பொருளாதார நிலையைப் பின்னடைவு என்று சொல்லமுடியாது. மாறாக இது பொருளாதாரச் சரிவு என்பதே உண்மை.

இன்றைய பொருளாதார நிலை 5 விழுக்காடு என்பதே பொருளாதாரச் சரிவு என்பதை உணர்த்துகிறது.

2012 - 2013 ஜனவரி- மார்ச் காலாண்டில் 4.3 சதவீதம் குறைவாக இருந்த உள்நாட்டு உற்பத்தி, கடந்த ஜூலை-செப்டம்பர் காலாண்டுகளில் இன்னும் குறைந்து 4.5 சதவீதம் ஆகிவிட்டது.

இப்படி நாடே பொருளாதாரத்தில் தள்ளாடிக் கொண்டிருக்கும்போது, தீவிரவாதச் சவால்களை முறியடிக்க இலங்கைக்கு ரூபாய் 358 கோடியும், இலங்கையின் வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூபாய் 2,870 கோடியும் ஆக மொத்தம் ரூபாய் 3,228 கோடியை இலங்கைக்கு இந்தியா கொடுக்கிறது.

அண்மையில் நடந்த இலங்கைப் பொதுத் தேர்தலில் ஈழத் தமிழர்களை இனஅழிப்பாக அழித்தொழித்த மகிந்த ராஜபக்சேவின் தம்பி கோத்தபய ராஜபக்சே அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே தமிழர் பகுதிகளுக்கு இலங்கை இராணுவம் அனுப்பப்பட்டது.

இந்தியா இலங்கைக்கு கொடுக்கும் நிதி ஈழத்தமிழர்களுக்கு எதிராகத் திரும்பாது என்பது என்ன நிச்சயம்.

# ‘கருப்பும் காவியும்’ நூல் அறிமுகம்

## வெற்றிச்செல்வன்

*1984, 1992, 2002ஆம் ஆண்டு நிகழ்வுகள் சிறுபான்மை மதத்தினருக்கும் இனத்தினருக்கும் மிக வலுவாக அறிவித்த செய்தி, இந்தியாவில் ஒரே ஒரு தேசியம், இந்து தேசியம் மட்டுமே இருக்க முடியும், இருக்க வேண்டும் என்பதுதான். பன்முகப் பண்பாட்டுடன், அனைத்து மதத்தினரையும் அனைத்து தேசிய இன மக்களையும் சமமாகி, நீதியுடன் நடத்துகின்ற ஒரு தேசத்தையும் தேசியத்தையும் காண விரும்புகிறவர்கள் வெறுக்கின்ற செய்தியே இது.*

- எஸ். வி. ராஜதுரை (இந்து, இந்தி, இந்தியா)


‘கருப்பும் காவியும்’ என்ற நூலின் தலைப்பே நூலின் உட்பொருளை எளிதில் உணர்த்துகிறது. கருப்பிற்கும் காவிக்குமான வேறுபாட்டினைத் தெளிவுபடுத்தும் இந்நூல் இணையத்தில் தொடராக வெளிவந்தது. தற்போது நூல் வடிவம் பெற்றுள்ளது.

இந்நூல் தமிழ்நாட்டில் இந்துத்துவ அரசியலை நுழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை வரலாற்றுச் சான்றுகளோடு முன்வைக்கிறது. மண்டைக்காடு கலவரம் தொடங்கி திருவள்ளுவருக்குக் காவிச்சாயம் பூசுவது வரை நடைபெற்ற நிகழ்வுகளுக்குப் பின்னேயுள்ள நுண்ணரசியலை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இந்துமதத்தின் வருணாசிரம தர்மத்திற்கும், ஆரிய மேலாதிக்கத்திற்குமான சான்றுகளை டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்களின் "இந்துமதத் தத்துவம்" என்னும் நூலிலிருந்தே மேற்கோள் காட்டி விளக்கியிருப்பது சிறப்பு. ஆண்டாண்டு காலமாக டாக்டர். இராதாகிருஷ்ணன் மீது கட்டமைக்கப்பட்டுள்ள புனித பிம்பத்தை இந்நூல் உடைத்துத் தூளாக்கியிருக்கிறது என்றால் அது மிகையாகாது.

அதுமட்டுமன்று. விவேகானந்தர் தொடங்கி காஞ்சி சங்கரன் வரை, இந்துத்துவ ஆளுமைகளாகக் கருதப்படுபவர்களைக் கொண்டே இந்து மதம் குறித்த கற்பிதங்கள் மறுக்கப்பட்டுள்ளன.

இறுதியாக, கருப்பு நிறம் எவ்வாறு காவிக்கு மாற்றாய், சமத்துவத்துக்கு ஆதரவாய் இந்த மண்ணில் இயங்கியது என்பதைக் காட்டி இந்நூல் முடிவடைகிறது.




**இன்றைய சமூக அமைப்பு மாற வேண்டும் என்பது கருப்பின் கொள்கை. இந்த அமைப்பை மாற்றவே கூடாது என்பது காவியின் பிடிவாதம்.**

**நூலின் பக்கம்- 17**

நூலின் பல இடங்களில் வரலாற்று நிகழ்வுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அந்நிகழ்வுகளுக்குச் சான்றாய் அந்நாளில் வெளிவந்த நாளிதழ்கள் படங்களோடு நூலில் சேர்க்கப்பட்டிருப்பின் அது நூலை மேலும் செம்மையாக்கும். அடுத்த பதிப்பில் இன்னும் பல தகவல்களோடும், சான்றாதாரங்களோடும் நூல் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்தியாவின் பன்மைத் தத்துவத்திற்கு ஊறு விளைவிக்கும் போக்குகள் அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ள நிலையில், இந்து தேசியத்தின் முகத்திரையைக் கிழிக்கும் இவை போன்ற நூல்கள் வெளிவருவது காலத்தின் கட்டாயம். ●

**கருப்பும் காவியும்**
வெளியீடு : கருஞ்சட்டைப் பதிப்பகம்
விலை : ரூ. 100/
தொலைபேசி 9940407468 / 044 24726408

கருஞ்சட்டைப் பதிப்பகம்

இணையத்தள விற்பனை (online sales)

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,